Volume: 07 Issue: 01 January to March 2025 www.irjtsjournal.org

# வினைத்திறனான பாடசாலை முகாமைத்துவ நடைமுறையில் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையின் முக்கியத்துவம்

Mrs.D.Vithukshana [1], Mr. V. Pragash [2]

*Lecturer (Prob)[1], Senior Assistant Registrar [2]*

*Department of Education & Childcare [1], Faculty of Arts and Culture [1, 2]*

*Eastern University [1, 2] Sri Lanka [1, 2]*

***ஆய்வுச் சுருக்கம்***

*கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாகத் தகவல்களை ஆவணப்படுத்தி வைப்பதன் முக்கியத்துவத்தைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் மண்முனை மேற்கு கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 50 சதவீத ஒதுகீட்டு மாதிரியின் அடிப்படையில் 15 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு மாதிரிகளாக அதிபர்கள்,SMC உறுப்பினர்கள்,SDEC உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதிபர்கள் மற்றும் SMC உறுப்பினர்கள் அனைவரும் நோக்கமாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு SDEC யில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்விப்பிரதிநிதி எனப் படையாக்கம் செய்யப்பட்டு அவர்களுள் ஒரு பிரிவில் இருந்து ஒருவர் என்ற அடிப்படையில் 15 பாடசாலைகளில் இருந்தும் ஆசிரியர்கள் 15 பேரும், பெற்றோர் 15 பேரும் பழைய மாணவர்கள் 15 பேருமாக 60 பேர் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு வலயக்கல்விப் பிரதிநிதி ஒருவராகையால் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, 61 உறுப்பினர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டதோடு, ஆசிரியர்கள் ஆண், பெண் எனப்படையாக்கம் செய்யப்பட்டு 4:1 என்ற விகித அடிப்படையில் இலகு எழுமாற்று மாதிரித்தெரிவின் மூலம் 85 பேர் தெரிவு செய்யப்பட்டு, வினாக்கொத்து, நேர்காணல் படிவம், குவியக்குழுக் கலந்துரையாடல் படிவம், அவதானிப்புப் படிவம் போன்ற ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டு, பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் Microsoft Excel ஐப் பயன்படுத்திப் பொருத்தமான அட்டவணைகள், வரைபுகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் பாடசாலைகளில் தகவல்வள முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாமையும், தகவல் தொழிநுட்பத்தில் தேர்ச்சி பெற்ற ஆளணியினர் மற்றும் கணிணி வசதிகள் இன்மையும், பாடசாலையில் முன்னெடுக்கும் முகாமைத்துவச் செயற்பாடுகள் நிகழ்காலத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படாமையும் கண்டறியப்பட்டு, பாடசாலையுடன் தொடர்புடைய தகவல்கள் EMIS மூலம் ஆவணப்படுத்துவதன் அவசியத்தைத் தெளிவுபடுத்தி, வினைத்திறனான பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய வகையில் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டன.*

**திறவுச் சொற்கள்:** *கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை (EMIS), வினைத்திறன், பாடசாலை முகாமைத்துவம்.*

## 1.1 அறிமுகம்

கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை (Educational Management Informational System- EMIS) என்பது பாடசாலை தொடர்பான தகவல்கள், மாணவர்கள் தொடர்பான விபரங்கள், பாடசாலையின் செயற்பாடுகள், மாணவர்களின் அடைவுகள், சாதனைகள், பாடசாலையின் எதிர்காலத்திட்டங்கள் போன்றன தொடர்பான தரவுகள், தகவல்களை உரிய முறையில் பகுப்பாய்வு செய்து ஒழுங்கான முறையில் பேணுவதுடன் தேவையான போது தேவையான இடங்களுக்கு அவற்றை வழங்கும் ஒழுங்கமைப்பு முறையாகும். தகவல் வளத்தை ஆவணப்படுத்தும் சிறந்த பொறிமுறையாகக் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையின் தேவைப்பாடு இன்று உணரப்பட்டு வருகின்றது. EMIS ஆனது கல்வி முறைமை பற்றிய தகவல்களை நிர்வகிக்க வடிவமைக்கப்பட்ட ஒரு தகவல் முறையாகும் (உலக வங்கி, 2014).

தகவல் வளம் பாடசாலைக்கு இலகுவாக கிடைக்கப் பெறக்கூடியதும் தொடர்ச்சியாகக் காணப்படுவதும், இன்றியமையாத வளமாகவும் இருப்பதனால் அவை தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருவது பாடசாலையின் வினைத்திறனான முகாமைத்துவ நடைமுறைகளுக்கு குறிகாட்டியாக அமையும். ஒரு கல்வி முறையின்

அனைத்து மட்டங்களிலும் முடிவெடுத்தல், கொள்கைப் பகுப்பாய்வு, திட்ட உருவாக்கம், கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றை திறம்பட மேற்கொள்ளத் தகவல்களை சேகரித்தல், ஒருங்கிணைத்தல், செயலாக்குதல், பராமரித்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றுக்கான ஒரு அமைப்பாக கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை உள்ளது (UNESCO, 2008).

அந்தவகையில் தகவல்களை ஆவணப்படுத்துவதில் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் தகவல்களை ஆவணப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட நடைமுறைச்சிக்கல்களை ஆய்வு செய்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் வகையிலும் இவ்வாய்வானது ஆய்வாளனால் மேற்கொள்ளப்படுகின்றது.

**1.2 ஆய்வுப் பிரச்சினை**

ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில், பாடசாலையுடன் தொடர்புடைய தரவுகளும் தகவல்களும் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாக (Educational Management Informational System- EMIS) தொடர்ச்சியாக ஆவணப்படுத்தப்படாமை பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலையின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளான திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளவும் தீர்மானம் எடுத்தல், பிரச்சினை தீர்த்தல் போன்ற பல்வேறுபட்ட முகாமைத்துவச் செயன்முறைகளுக்கு பயன்படுத்தவும் பிறருக்கு வழங்கவும் கல்வியுடன் தொடர்புடைய தகவல்களைத் திரட்டுதல், ஆவணப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், களஞ்சியப்படுத்தி வைத்தல் என்பன முக்கியமாயினும் ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் அவை முறையான ஒழுங்கில் மேற்கொள்ளப்படுவதில்லை.

Nuijten மற்றும்Mittendorfஎன்போர்2011 இல் Practical Issues In Handling Data Inputs & Analysis என்னும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் பெரும்பாலான பதிவுகள் நிறுவன ஆட்களினால் கைமுறையாகத் தயாரிக்கப்படுவதனால் பதிவுகளைச் செயலாக்கம் செய்தல், மீட்டெடுத்தல், பயன்படுத்தல் என்பன எளிதாக அமைவதில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளின் தேவைகள் முறையாக இனங்காணப்படாது நடைமுறையில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலையின் தகவல் வளத்தை வைத்துப் பாடசாலையில் நடைமுறைப் பிரச்சினைகளை தீர்க்க முடியாதுள்ளதோடு பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை முன்கூட்டியே இனங்காண முடியாதுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தகவல் தொழிநுட்ப அறிவில் தேர்ச்சியுடைய ஆளணியினர் இருப்பினும் தொடர்ச்சியாக மாற்றங்களை உள்வாங்கி நடைமுறைப்படுத்தாது தரவுகளை எழுதிக் கோப்புக்களாக வைத்திருக்கும் நடைமுறை காணக்கூடியதாக உள்ளது. தகவல்கள் தொடர்ச்சியாக பதிவு செய்யப்படாமை, தினமும் இற்றைப்படுத்தப்படாமையால் தகவல்கள் பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டு அழிவடைதல், தகவல்கள் ஊழியர்களால் திருடப்படுதல், மறைக்கப்படுதல், சுயநலன்களுக்காக பதிவு செய்யாது விடுபடுதல் முதலான செயற்பாடுகள் பாடசாலைகளின் முன்னேற்றகரமான திட்டங்களை உருவாக்கல், திட்டங்களை மாற்றியமைத்தல் போன்றவற்றில் பல்வேறு இடர்களை ஏற்படுத்தியுள்ளமையினைப் பின்புலமாகக்கொண்டு இவ்வாய்வு ஆய்வாளனால் மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினைக்கூற்று**

மண்முனை மேற்கு கல்விக் கோட்ட பாடசாலைகளில் தகவல் வளமானது கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாக (EMIS) உள்வாங்கப்பட்டு, தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு, வராமையினால் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் மேற்கொள்ள முடியாதுள்ளது.

**1.3 ஆய்வு நோக்கம்**

**பொது நோக்கம்**

பாடசாலையின் தகவல் வளம் முறையாக ஆவணப்படுத்தப்படாமை பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாடுகளின் வினைத்திறனான தன்மைக்கு தடையாக உள்ளமையை கண்டறிந்து, அதனை நிவர்த்தி செய்ய கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாக பாடசாலைசார் தகவல்களை ஆவணப்படுத்தி வைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. பாடசாலையில் தற்போது முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக மேற்கொள்ள பின்பற்றப்படும் நடைமுறைகளை இனங்காணல்.
2. பாடசாலையில் தகவல் வளம் ஆவணப்படுத்தப்படும் முறையைப் பரிசீலித்தல்.
3. பாடசாலையின் தரவுகளையும் தகவல்களையும் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையைப் பயன்படுத்தி ஆவணப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மதிப்பிடல்.
4. வினைத்திறனான பாடசாலை முகாமைத்துவ நடைமுறைக்கு பாடசாலையின் தகவல்களைக் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாகக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைத்தல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு

Olayanju மற்றும்ஏனையோர் 2021 இல் The Education Management Information System & The Educational Management என்னும் தலைப்பில் நைஜீரியாவில் மேற்கொண்ட ஆய்வின்படி நிறுவனங்களில் பதிவுகள் என்பது அதிகார பூர்வமான ஆவணங்கள், நிகழ்வுகள் பற்றிய தேவையான மற்றும் முக்கியமான தகவல்களைக்கொண்ட கோப்புகள் ஆகும். நிறுவனத்தின் அனைத்து விதமான செயற்பாடுகளும் பதிவுகளையும், தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டே திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் வளம் நிறுவனத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகும் என குறிப்பிட்டுள்ளனர். இவ்வாய்வு முடிவானது பாடசாலையில் உள்ள வளங்களுள் தகவல் வளம் தொடர்பான இவ்வாய்வை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது.

Christopher என்பவர் 2002 இல் Data Use In The Classroom-The Challenges of Implementing Data-Based Decision Making at the School Level என்ற தலைப்பில் பிரித்தானியாவில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் குறித்த ஒரு விடயத்தைப்பற்றி மேலதிக அறிவை வழங்குவது தகவலாகும். தரவுகளை தரவுச் செய்முறைக்கு உட்படுத்துவதன் மூலம் தகவல் பெறப்படும். பாடசாலையில் தகவல்கள் என்பது தீர்மானம் எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான மூலமாகும். பாடசாலையில் செயற்பாடுகளுடன் தொடர்புடைய கற்றல் போது கற்றல் கற்பித்தல் தொடர்பான தகவல்கள், ஆளணியினருடன் தொடர்புடைய தகவல்கள், பாடசாலையில் இடம்பெறும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய தகவல்கள் என்பவற்றைக்கொண்டு பகுப்பாய்வு செய்வது வெற்றிகரமானதாக அமையும் எனக்குறிப்பிட்டார். இவ்வாய்வு முடிவானது ஆய்வாளரின் ஆய்வு நோக்கத்தினை மேலும் வலுப்படுத்தும் வகையில் உள்ளது.

Odinah என்பவர் 2016 இல் Importance of Documentation என்னும் தலைப்பில் பிலிப்பைன்ஸில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் பாரம்பரியமான முறையில் கைமுறையில் தரவுகளை பதிவு செய்வதன் மூலம் முக்கிய கல்விப்பதிவுகள் சிதைக்கப்படுவதோடு பணியாளர்களினால் கவனமின்றி கையாளப்படுவதனால் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அதனால் தகவல்கள் பாடசாலையில் நிரந்தரமான முகாமைத்துவ முறைமைக்கு உள்வாங்கப்பட்டு இலகுவாக சிதைக்கப்பட முடியாத அமைப்பில் கோப்புக்களாக ஆவணப்படுத்துவது பாதுகாப்பானதாக அமையும் எனக்குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வு முடிவானது ஆய்வாளரின் ஆய்வுப் பிரச்சினையை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது.

Gebremeshkal என்பவர் 2020 இல் Technology in School Management என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவில் கல்வித் தொழிநுட்பம் என்பது நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதாகும். தொழிநுட்பத்துக்கூடாக பாடசாலைச் செயற்பாடுகள் இடம் பெற வேண்டியதோடு இன்றைய உலகில் பாடசாலைகளின் விளைதிறன் மிக்க தன்மையானது அங்கு பயன்படுத்தப்படும் தொழிநுட்பக் கருவிகளின் வினையாற்றலிலே தங்கியுள்ளது எனக்குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வு முடிவானது ஆய்வாளனின் ஆய்வு நோக்கத்தை வலுவூட்டும் வகையில் உள்ளது.

## 3.0 ஆய்வு முறையியல்

ஆய்விற்காக 15 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு மாதிரிகளாக அதிபர்கள்,SMC உறுப்பினர்கள்,SDEC உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் தெரிவு

செய்யப்பட்டுள்ளனர். வினாக்கொத்து, நேர்காணல் படிவம், குவியக்குழுக் கலந்துரையாடல் படிவம்,அவதானிப்புப் படிவம் போன்ற ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து, அவதானம் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

### 3.1 மாதிரித் தெரிவு

ஆய்வுப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுத்தலைப்புடன் தொடர்புடையவர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள 30 பாடசாலைகளுள் 15 பாடசாலைகள் 50 சதவீதத்தின் அடிப்படையில் ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வில் சரியான வகையில் பாடசாலைகள் அனைத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைவதற்காக இம்மாதிரித் தெரிவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஆய்வாகையால் ஆய்வுப்பிரதேசத்தில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளின் 15 அதிபர்களும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வு நோக்கத்திற்கமைய நம்பகமானதும், துல்லியமானதுமான தகவல்கள் கிடைக்கப்பெறும் என்பதனால் இவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாய்வின் மூலம் பாடசாலையில் நடைமுறையின் முகாமைத்துவச் செயற்பாடுகளை அறிய வேண்டியுள்ளமையினால் ஆய்வுப் பிரதேசத்தில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளிலும் உள்ள பாடசாலை முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆய்வு நோக்கம் கருதிய வகையில் நோக்க மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முகாமைத்துவ நடைமுறைகளில் இவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் இவர்கள் மூலமாக அறிந்து கொள்வதனால் நம்பகத்தகுந்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதில் இம்மாதிரித் தெரிவு இடம் பெற்றுள்ளது.

பாடசாலையில் பல்வேறுபட்ட திட்டங்களை முன்னெடுக்கவும் மாற்றங்களை உள்வாங்கி செயற்படுத்தவும் பாடசாலையைச் சமூகத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு முக்கியத்துவம் பெறுவதனாலும் ஆய்வுப்பிரதேசத்தில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள SDEC உறுப்பினர்கள் அனைவரையும் மாதிரியாகத் தெரிவு செய்வதில் சமநிலையற்ற தன்மை நிலவுவதனால்,SDEC உறுப்பினர்களில் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வரையறுக்கப்பட்டு சிலர் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


பாடசாலையில் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலைத் தரவுகளையும் தகவல்களையும் ஆவணப்படுத்தி, பராமரிப்பதிலும், அவற்றின் நம்பத்தைப் பேணுவதிலும் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும். இவ்வாய்வானது குறுகிய காலப்பகுதியைக் கொண்டிருப்பதனால், பாடசாலையில் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாக இந்த ஆய்வினை மேற்கொள்வது சிரமம் என்பதனால் பாடசாலையில் உள்ள ஆசிரியர்களில் இருந்து வரையறுத்து குறிப்பிட்ட சிலர் மாதிரியாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 4.0 தரவுப் பகுப்பாய்வுகள்

### 4.1 பாடசாலைகளில் தற்போது முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக மேற்கொள்ளப் பின்பற்றப்படும் நடைமுறைகளை இனங்காணல்.

பாடசாலையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்தினுடையதாக மேற்கொள்ள பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன என்ற கூற்று ஆசிரியர்களுக்கும்,SDEC உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. அதற்கான ஆசிரியர்கள் மற்றும் SDEC உறுப்பினர்களின் துலங்கல் உரு 4.1 மூலம் காட்டப்பட்டுள்ளது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR




**உரு 4.1: பாடசாலைகளில் தற்போது மேற்கொள்ளப்படும் முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான துலங்கல்.**

இப்பகுப்பாய்வின் அடிப்படையில் நோக்கும் போது ஆசிரியர்கள்,SDEC உறுப்பினர்களின் பெரும்பாண்மையான துலங்கல்கள் எதிர்மறையானதாகவே காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் இடம்பெற்றுவரும் முகாமைத்துவச் செயற்பாடுகள் நவீனமானவையாகவோ, வினைத்திறனுடையதாகவோ முன்னெடுக்கப்படுவதில்லை என இப்பகுப்பாய்வு முடிவு தெளிவுபடுத்துகின்றது.

பாடசாலையில் உள்ள முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் ஆளணியினரின் முகாமைத்துவத் திறன்கள் பற்றி ஆசிரியர்களிடம் தகவல்களைப்பெறும் வகையில் வினாக்கொத்தின் மூலம் அவர்களது துலங்கல்கள் அறியப்பட்டன. அந்தவகையில் வினா இலக்கம் 1.2 இல் பாடசாலையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆளணியினர் முகாமைத்துவம்சார் திறன்களைக் கொண்டவர்களாவர் என்ற துலங்கல் வழங்கப்பட்டது. அதற்கான ஆசிரியர்களின் துலங்கல் அட்டவணை 4.1 இன் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1: முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆளணியினரின் முகாமைத்துவத் திறன்கள் பற்றிய துலங்கல்.**

| துலங்கல்கள் | விடையளித்தோர் தொகை | விடையளித்தோர் சதவீதம் |
|---|---|---|
| வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் | 02 | 2.35% |
| ஏற்றுக் கொள்கின்றேன் | 11 | 12.94% |
| நடுநிலை | 15 | 17.64% |
| எதிர்க்கின்றேன் | 39 | 45.88% |
| வலுவாக எதிர்க்கின்றேன் | 18 | 21.17% |
| மொத்தம் | 85 | 100% |


இப்பகுப்பாய்வின் அடிப்படையில் பாடசாலையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆளணியினரின் முகாமைத்துவத்துவத் திறன்கள் தொடர்பான ஆசிரியர்களின் துலங்கலானது எதிர்மறையான துலங்கல்களாகவே உள்ளன. ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளின் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் அனுபவமும், தகுதியுமற்ற ஆளணியினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை இப்பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகின்றது.


© 2025, IRJTSR

**4.2 பாடசாலையில் தகவல் வளம் ஆவணப்படுத்தப்படும் முறையை பரிசீலித்தல்.**

ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ள முறையைக் கண்டறியும் வகையில் ஆசிரியர்களிடம் வினாக்கொத்து மூலம் தகவல்கள் திரட்டப்பட்டதோடு ஆய்வாளனால் ஆய்வுப் பாடசாலைகளுக்குச் சென்று அவதானம் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன.

ஆசிரியர்களுக்கான வினாக்கொத்தினூடாக பாடசாலையில் தகவல் வளம் ஆணப்படுத்தப்படும் முறை என வினவப்பட்டு கைமுறையில் எழுதிக் கோப்புக்களாக ஆவணப்படுத்தி வைத்தல், கணினியில் EMIS ஐப்பயன்படுத்தி ஆவணப்படுத்தி வைத்தல்,இரு முறைகளையும் பின்பற்றல் என்ற தெரிவு வழங்கப்பட்டது. அத்தெரிவிற்கு ஆசிரியர்களின் தெரிவுகளின் அடிப்படையில் நோக்கும் போது பாடசாலைகளில் 61 ஆசிரியர்கள் (71.76%) கைமுறையில் எழுதி கோப்புக்களாக ஆவணப்படுத்தி வைத்தல் என்பதை தெரிவு செய்துள்ளதோடு 18 ஆசிரியர்கள் (21.17%) கணினியில் EMIS பயன்படுத்தி ஆவணப்படுத்தி வைத்தல் என்பதைத் தெரிவு செய்துள்ளதோடு இரு முறைகளிலும் தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன என 06 ஆசிரியர்கள் (7.05%) பதிலளித்துள்ளனர். இதனை உரு 4.2 தெளிவாகக் காட்டுகின்றது.





**உரு 4.2: பாடசாலைகளில் தகவல்கள் ஆவணப்படுத்தி வைத்தல் பற்றி தெரிவு**

ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் தகவல் வளமானது கைமுறையில் தகவல்கள் எழுதப்பட்டு கோப்புக்களாக ஆவணப்படுத்தி வைக்கப்படும் மரபு ரீதியான முறையே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன. ஒரு சில பாடசாலைகளில் கணினியில் தகவல்கள் ஆவணப்படுத்தி வைக்கப்பட்டுள்ளமை ஆய்வாளனால் நேரடியாக அவதானிக்கப்பட்டது.

**4.3 பாடசாலையில் தரவுகளையும் தகவல்களையும் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினைப் பயன்படுத்தி ஆவணப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மதிப்பிடல்.**

கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி முறைமையின் முக்கியத்துவத்தை அறியும் பொருட்டு SDEC உறுப்பினர்களிடம் வினாக்கொத்தின் மூலம் வினவிய வினாக்களுக்கு அவர்கள் அளித்த துலங்கல் பின்வரும் உரு 4.3 இல் காட்டப்பட்டுள்ளது.


© 2025, IRJTSR




**உரு 4.3: கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி முறைமையின் முக்கியத்துவம்**

இத்தரவுப் பகுப்பாய்வுகள் பாடசாலை உள்ளக சமூகத்தினருக்கு கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி முறைமையின் முக்கியத்துவத்தை அறிந்திருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

**4.4 வினைத்திறனான பாடசாலை முகாமைத்துவ நடைமுறைக்கு பாடசாலையின் தகவல்களைக் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாகக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைத்தல்.**

ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவற்றை இழிவளவாக்கி முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகக் கொண்டு நடாத்துவதில் EMIS இன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் SDEC உறுப்பினர்களிடம் வினாக்கொத்து மூலமும் அதிபர்களிடம் நேர்காணம் மூலமும் SMC உறுப்பினர்களிடம் கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

SDEC உறுப்பினர்களுக்கான வினாக்கொத்தில் EMIS இற்கூடாக பாடசாலைத் தரவுகளையும் தகவல்களையும் ஆவணப்படுத்துவதானது SDECயின் செயற்பாடுகளில் ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதாக அமையும் என்ற கூற்று வழங்கப்பட்டது.

EMIS இற்கூடாக பாடசாலைத் தரவுகளையும் தகவல்களையும் ஆவணப்படுத்துவதானது SDEC யின் செயற்பாடுகளில் ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதாக அமையும். என்ற கூற்றுSDEC உறுப்பினர்களிடம் வழங்கப்பட்ட போது வலுவாக ஏற்றுக் கொள்கின்றேன் என்னும் துலங்கலை 28 SDEC உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். ஏற்றுக்கொள்கின்றேன், நடுநிலை, எதிர்க்கின்றேன் மற்றும் வலுவாக எதிர்க்கின்றேன் என்னும் துலங்கல்களை எவரும் அளிக்கவில்லை. இதன்படி வலுவாக ஏற்றுக் கொள்கின்றேன் என்று 100 சதவீதமான SDEC உறுப்பினர்களும் துலங்கலைத் தெரிவித்துள்ளனர்.

இப்பகுப்பாய்வின் அடிப்படையில் நோக்கும் போது ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது நடைமுறையில் எதிர்கொண்டு வரும் பல்வேறு வகையான நடைமுறைச் சவால்களை தீர்க்க EMIS ஐப்பயன்படுத்தி தகவல்களை ஆவணப்படுத்துவது முக்கியத்துவம் வாய்ந்தது என அனைத்து SDEC உறுப்பினர்களும் உணர்ந்துள்ளனர்.

அதிபர்களுக்கான நேர்காணலில் பாடசாலையில் நடைமுறையில் எதிர்கொள்ளும் முகாமைத்துவம்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் EMIS ஐப் பயன்படுத்தித் தகவல்களை ஆவணப்படுத்துவதன் வினையாற்றல் தன்மை தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் யாவை? என்ற வினா வினவப்பட்ட போது நிகழ்காலத்துக்குப் பொருத்தமான திட்டங்களை வகுக்க EMIS இல்


© 2025, IRJTSR

ஆவணப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் வழிவகுக்கும் என 06 அதிபர்களும்,EMIS இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் வலுக்களின்றி, துல்லியமானவயாகக் காணப்படுகின்றமையினால் முகாமைத்துவ நடைமுறைகளில் பாடசாலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வினைக்காணலாம் என 04 அதிபர்களும்,EMIS இல் ஆவணப்படுத்தப்படும் ஒவ்வொரு விடயமும் தனித்தனி கோப்புக்களாக பொருத்தமான முறையில் பதிவு செய்யப்படுவதனால் இலகுவாகத் தீர்மானம் மேற்கொள்வதற்கு வழிவகுக்கும் என 05 அதிபர்களும், பாடசாலை எதிர்கொள்ளவுள்ள சவால்கள், அச்சுருத்தல்கள், பலயீனங்கள் என்பவற்றை முன்கூட்டியே அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என 04 அதிபர்களும் பதிலளித்துள்ளனர்.

அதே வினா பாடசாலை முகாமைத்துவக்குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் வினவப்பட்ட போது பிரச்சினைக்குறிய தகவல்களை உடனடியாகப் பெற்று தீர்வினைக்காண முடியும் என 02 குழுக்களும், பாடசாலையின் தற்போதைய நிலை, எவ்வாறு முன்னேற்றப்பட வேண்டும் என்பவற்றை அறிந்து அதன்படி பணியாற்றலாம் என 04 குழுக்களும், பாடசாலையின் முன்னேற்றத்தில் தொடர்ச்சியான தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சங்களை இனங்காணலாம் என 04 குழுக்களும் EMIS மூலம் தகவல்கள் தற்காலப்படுத்தப்படுவதனால் தற்காலத்திற்குப் பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என 03 குழுக்களும் பதிலளித்துள்ளனர்.

Alam மற்றும் ஏனையோரினால் 2021 இல் EMIS In progressive Education & Development என்னும் தலைப்பில்பங்களாதேஷில் மேற்கொண்ட ஆய்வு முடிவின்படி நிறுவனத்தின் கல்வி முறைமைகளை உள்ளிடுதல், வளங்கள் நிர்வாகம், செயற்பாடுகள், முடிவுகளைப் பகுப்பாய்வு செய்தல், அதன் மூலம் திட்டமிடல் கொள்கை உருவாக்கம், தீர்மானம் எடுத்தல் என்பவற்றை சிறந்ததாக உபயோகிக்க கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையின் மூலம் தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் தொடர்ச்சியான ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலையின் நிர்வாகச் செயற்பாட்டை அறிந்து கொள்ளலாம் எனக்குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வு முடிவானது ஆய்வுப்பகுப்பாய்வின் மூலம் பெற்ற முடிவினை நிரூபிக்கும் வகையில் உள்ளது.

### 5.0 முடிவுகளும் விதப்புரைகளும்

#### 5.1 பாடசாலைகளில் தற்போது முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக மேற்கொள்ளப் பின்பற்றப்படும் நடைமுறைகளை இனங்காணல்.

**முடிவுகள்**

1. பாடசாலைகளில் தற்போது மேற்கொள்ளப்படும் முகாமைத்துவச் செயற்பாடுகள் வினைத்திறனற்ற வகையிலே உள்ளன என்ற முடிவு 88.22 சதவீதமான ஆசிரியர்களினதும், 89.27 சதவீதமான SDEC உறுப்பினர்களினதும் துலங்கல்கள் மூலம் பெறப்பட்டது.

2. முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் ஆளணியினரின் முகாமைத்துவத் திறன்கள் போதியதாக இல்லை என்ற முடிவானது 84.69 சதவீதமான ஆசிரியர்களினது துலங்கல்கள் மூலம் பெறப்பட்டது.

3. பாடசாலையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக மேற்கொள்வதில் நடைமுறையில் பல்வேறு சவால்கள் உள்ளன என்ற முடிவானது 90.58 சதவீதமான ஆசிரியர்களினதும் 100 சதவீதமான SDEC உறுப்பினர்களினதும் துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

1. பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் பல்வேறு உத்திகள் உள்வாங்கப்பட்டு காலத்திற்கும் சூழலுக்கும் பொருந்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். Supriyatha என்பவரால் 2016 இல் Effective School Management என்னும் தலைப்பில் இந்தோனேசியாவில் மேற்கொண்ட ஆய்வு முடிவிலும் கல்வி நிறுவனங்களின் வினைத்திறனான செயற்பாட்டுக்கு முகாமைத்துவச் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. பாடசாலை முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் ஆளணியினரின் முகாமைத்துவத் திறன்கள் தொடர் பயிற்சிகள், வழிகாட்டல் ஆலோசனைகள் மூலம் விருத்தி செய்யப்பட வேண்டும். Sulthan மற்றும் குழுவினர் 2021 இல் Effective School Managementஎன்னும் தலைப்பில் துருக்கியில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் தகவல் தொடர்பாடல் திறன்கள் மேம்படுத்தப்படுதல் வேண்டும். முகாமைத்துவ ஆளணியினரின் நிபுணத்துவ அறிவு மேம்படுத்தப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

3. பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஆளணி மற்றும் பௌதீக வளங்களினால் ஏற்படும் நடைமுறைச் சவால்கள் வினைத்திறனான முறையில் தீர்க்கப்பட வேண்டும். இது Saglam என்பவரால் 2023 இல் Problems and Solution Methods of School Managersஎன்னும் தலைப்பில் துருக்கியில் மேற்கொண்ட ஆய்வு முடிவின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**5.2 பாடசாலையில் தகவல் வளம் ஆவணப்படுத்தப்படும் முறையை பரிசீலித்தல்.**

**முடிவுகள்**

1. பாடசாலையில் தகவல் வளமானது கைமுறையினாலேயே ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது என்ற முடிவானது 71.76 சதவீதமான ஆசிரியர்களினது துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

2. ஆய்வுப்பிரதேசப் பாடசாலைகளில் தகவல் வள முகாமைத்துவம் சீராக இடம்பெறவில்லை என்ற முடிவானது 89.4 சதவீதமான ஆசிரியர்களினதும் 85.7 சதவீதமான SDEC உறுப்பினர்களினதும் துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

3. பாடசாலையில் தகவல்கள் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டு. ஆவணப்படுத்தப்படுவதில்லை என்ற முடிவானது 100 சதவீதமான ஆசிரியர்களினதும் SDEC உறுப்பினர்களினதும் துலங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

1. தகவல்களை ஆவணப்படுத்துவதில் பாரம்பரிய முறைகள் கைவிடப்பட்டு நவீன நுட்ப முறைகள் உள்வாங்கப்பட வேண்டும். இது Nuijten மற்றும்Mittendorfஎன்போர்2011 இல் PracticalIssues In Handling Data Inputs & Analysisஎன்னும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வு முடிவின் மூலமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. பாடசாலைகளில் தகவல் வளம் வெளியில் இருந்து கொள்வனவு செய்ய முடியாததும், அழிவுற்றால் மீண்டும் பெறமுடியாததும், நிகழ்கால செயற்பாடுகளுக்கும் எதிர்கால வெற்றிக்கும் உறுதுணையாக அமைவதனாலும் அவை பாடசாலைகளில் உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

3. நடைமுறையில் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்பன தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முறையான ஒழுங்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். Lyesnikova மற்றும் Mariyana போன்றோர் 2020 இல் Methodological Principals Of Indicator Development To The Education Management Information System என்னும் தலைப்பில் உக்ரைனில் மேற்கொண்ட ஆய்வு முடிவின் மூலமும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அன்றாடத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**5.3 பாடசாலையில் தரவுகளையும் தகவல்களையும் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினைப் பயன்படுத்தி ஆவணப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மதிப்பிடல்.**

**முடிவுகள்**

1. EMIS ஐப் பயன்படுத்தி பயன்படுத்தி பாடசாலையுடன் தொடர்புடைய தகவல்களை ஆவணப்படுத்துவதன் மூலம் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் மேற்கொள்ளலாம் என 92.86 சதவீதமான SDEC உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2. EMIS ஐப் பயன்படுத்தி தரவுகளும் தகவல்களும் ஆவணப்படுத்தப்பட்டு வருவதன் மூலம் நேரத்தை வினைத்திறனுடையதாகப் பயன்படுத்தலாம்என 78.57 சதவீதமான SDEC உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

3. தகவல்கள் EMIS இற்கூடாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளமையினால் பாடசாலையில் வளத்தேவைகளை இலகுவாகக் கண்டறியக்கூடியதாக உள்ளதுஎன 71 சதவீதமான SDEC உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

**விதப்புரைகள்**

1. பாடசாலையில் உள்ள ஆளணியினருக்கு கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை பற்றிய புரிதலை ஏற்படுத்த வேண்டும்.

2. தகவல்களை ஆவணப்படுத்துவதில் மரபு ரீதியான வழிமுறைகள் கைவிடப்பட்டு EMIS பொறிமுறை மூலம் ஆவணப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட வேண்டும். இது Lesnikova என்பவர் 2019 இல் Analysis Of International Experiences In Constructing The Information System Of Education Management In The Field Of Technical, Vocational, Education & Training என்னும் தலைப்பில்உக்ரைனில்மேற்கொண்ட ஆய்வு முடிவின் மூலமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

3. EMIS ஐப் பயன்படுத்தித் தகவல்களை ஆவணப்படுத்தி 21ம் நூற்றாண்டுத் தொழிநுட்ப உலகுக்கு ஏற்றாற்போல் நவீன தொழிநுட்ப சாதனங்களின் பயன்பாட்டை பாடசாலைகளில் மேம்படுத்த வேண்டும். Wambura என்பவர்2017இல்The Extent of Computer Usage Among School Teachers and Studentsஎன்னும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் பாடசாலையின் செயற்பாடுகளைக் கணினிமயப்படுத்தப்பட வேண்டும் எனப்பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

4. பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் வினைத்திறன் தன்மையில் நேரவளம் நேரடித்தாக்கத்தினை செலுத்துவதனால் குறைவளவான நேரத்தில் துல்லியமான தகவல்களை ஆவணப்படுத்த EMIS ஐப்பயன்படுத்த வேண்டும்.

**4.4 வினைத்திறனான பாடசாலை முகாமைத்துவ நடைமுறைக்கு பாடசாலையின் தகவல்களைக் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்கூடாகக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைத்தல்.**

**முடிவுகள்**

1. பாடசாலையில் தகவல் வளம் EMIS இற்கூடாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவானது 100 சதவீதமான ஆசிரியர்களினதும் SDEC துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

2. பாடசாலையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளை இழிவளவாக்க பாடசாலையுடன் தொடர்புடைய தகவல்கள் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையில் (EMIS) ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவானது 100 சதவீதமான SDEC உறுப்பினர்களினது துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

3. பாடசாலையில் EMIS இன் பயன்பாட்டை அதிகரிக்கப் பாடசாலையில் உள்ள ஆளணியினரை தகவல் தொழிநுட்ப அறிவில் தேர்ச்சி பெறச்செய்தல் வேண்டும் என்ற முடிவானது 100 சதவீதமான ஆசிரியர்களினதும் SDEC உறுப்பினர்களினதும் துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

4. EMIS ஐப்பயன்படுத்தி ஆவணப்படுத்தப்படும் தகவல்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் கடவுச்சொல் (Pass Word) வசதிகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவானது 100 சதவீமான ஆசிரியர்களினதும் SDEC உறுப்பினர்களினதும் துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

5. EMIS இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் பிரத்தியேகமாக Hard Disc, CD, Pendrive என்பவற்றில் சேமித்து வைக்கப்பட வேண்டியதோடு அத்தகவல்கள் தொடர்ச்சியாக வன்பிரதி (Hard Copy) செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவானது 100 சதவீமான ஆசிரியர்களினதும் SDEC உறுப்பினர்களினதும் துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

6. EMIS ஐப்பயன்படுத்தி தகவல்களை ஆவணப்படுத்துவது குறித்து பாடசாலை மட்டத்தில் போதிய தெளிவின்மையினால் அதனை வலியுறுத்தும் வகையில் வலய மட்டத்தில் விழிப்புணர்வூட்டல்களும் கருத்தரங்குகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முடிவானது ஆசிரியர்களினதும் 100சதவீதமான SDEC உறுப்பினர்களினது துலங்கல்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

1. பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக மேற்கொள்ள பாடசாலையின் தகவல் வளம் பயன்படுதன்மையுடன் கூடிய வகையில் EMIS இற்கூடாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

2. பாடசாலையின் உள்ளக வினைத்திறன், வெளியக வினைத்திறன், பாடசாலையின் இயக்கம், பலம், பலவீனங்களை எடுத்துக்காட்டும் வகையில் செயற்றிறன் வாய்ந்ததாக EMIS பயன்படுத்தப்பட வேண்டும்.

3. பாடசாலை முகாமைத்துவ நடைமுறைக்கு பாடசாலையின் உள்வாரியான உள்ளீடு, செயன்முறை, வெளியீட்டுடன் தொடர்புடைய தகவல்களும் வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகையால் ஆவணப்படுதலானது EMIS இற்கூடாக இடம் பெற வேண்டும்.

4. பாடசாலையில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், வழிப்படுத்தல், தீர்மானமெடுத்தல், பிரச்சினை தீர்த்தல் முதலான முகாமைத்துவச் செயற்பாடுகள் EMIS இன் அடிப்படையில் களஞ்சியப்படுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. EMIS ஐப் பயன்படுத்தி பாடசாலையில் கற்றல் கற்பித்தலுடன் தொடர்புடைய தகவல்களை ஆவணப்படுத்தி தற்காலப்படுத்தி வைக்க கணினி வசதிகள் மற்றும் தொழிநுட்ப சாதன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

6. பாடசாலையில் உள்ள அதிபர், பிரதி அதிபர், பாடசாலை முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகிய அனைவரையும் தகவல் தொழிநுட்ப அறிவில் தேர்ச்சி பெறச்செய்தல் வேண்டும்.

7. தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதற்காக தொடர் வழிகாட்டல் கருத்தரங்குகள், பயிற்சிநெறிகள் பாடசாலையில் உள்வாரியாகவும் கோட்ட, வலய, மாகாண அடிப்படையிலும் நடாத்தப்பட வேண்டும்.

**சாராம்சம்**

பாடசாலையின் சீறான இயக்கத்துக்கு வளங்கள் இன்றியமையாத தேவையாக உள்ளன. பாடசாலையில் தகவல் வளத்தின் தேவைப்பாட்டையும் இன்றியமையாமையையும் தெளிவுபடுத்துவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலையின் இலக்கைத் தீர்மானிப்பதில் தகவல் வளம் குறிகாட்டியாக இருப்பதனால் அது முறையாக பேணப்பட வேண்டியதன் அவசியத்தை கல்வித்துறைக்கு எடுத்துக்காட்டுகின்றது.

ஆய்வுப்பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பெரும்பாலும் நவீனமயப்படுத்தலுக்கு உள்ளாகியிருக்க தகவல் வளம் தொடர்பான கரிசனை காட்டப்படாமையை வெளிச்சத்துக்கு கொண்டுவந்து அதனால் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்த முடியாமையை தெளிவுபடுத்தி, அதற்கு தீர்வாக EMIS ஐப்பயன்படுத்துவதன் அவசியப்பாட்டை வலியுறுத்துவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை பின்பற்றப்படாமையில் தாக்கம் செலுத்தும் காரணிகளுள் ஆளணியினரின் தகவல் தொழிநுட்பத்துடனான திறன்கள் இன்மை பிரதான காரணமாக உள்ளமையைத் தெளிவுபடுத்தி 21ம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான வகையில் அதிபர், ஆசிரியர்கள் கல்வி கல்விசாரா ஊழியர்களை தகவல் தொழிநுட்பவியலில் தேர்ச்சி பெறச்செய்வதன் அவசியப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்கு இவ்வாய்வு உதவும் வகையில் அமைகின்றது.

**உசாத்துணைகள்**

[1] அபூபக்கர்நளீம், எஸ், 2011.**பாடசாலை அதிபர்-சில சிந்தனைகள்**,ஆசிரியம்(07), சேமமடு பதிப்பகம், கொழும்பு.
[2] இரவீந்திரன், 2015. **முகாமைத்துவ நடைமுறைகள்**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[3] கனகசிங்கம், வ, 2012. **நவீன முகாமைத்துவ நடைமுறைகள்**, குமரன் அச்சகம், கொழும்பு -06.
[4] கல்வி அமைச்சு, 2022. **கல்வியை டிஜிட்டல் முறைமைக்கு மாற்றுவதற்கான கொள்கை.** இசுறுபாய, பத்தரமுல்லை, இலங்கை.
[5] கல்வி அமைச்சு, 2020,**பாடசாலை முகாமைத்துவ வழிகாட்டி – அதிபர்களுக்கான கைந்நூல்,**இசுறுபாய. ,பத்தரமுல்லை, இலங்கை.
[6] கல்வி அமைச்சு, 4/2020. **மாணவர்கள் தொடர்பான தகவல்களை தேசிய மயப்படுத்தல்- சுற்றறிக்கை.**இசுறுபாய, பத்தரமுல்லை, இலங்கை.
[7] Nuijten M, J, C & Mittendorf, T, U, 2011. **PracticalIssues In Handling Data Inputs & Analysis,** DOI/10.1007/s10198-010-0236-4.

[8] Odinah, et al, 2021. **Education management information system in public elementary school**: International Journal of scientific research and management, Philippines, Volume-6, https://doi.org/10.18535

[9] Odusanya, O, 2019. **Use of EMIS in University of Lagos Distance Learning Education**: International journal of Engineering & Information System, Nigeria. ISSN No: 2000.000X, Volume-3.

[10] Olayanju, et al, 2021. **The education management information system and the educational management:** International Journal of Advanced research, Nigeria, ISSN no: 2320-5407.

[11] Pashiardis,P, and Johnson,O, 2020. **Effective Schools,** Volume-49. https://doi.org/10.1177/17411/43220932585

[12] Pekkoley, S, 2021. **Implements of school management**: Journal of advanced in Education & philosophy, Turkey. http://doi.org/10.36348/jaep.2021/vo5i08.001

[13] Pisonova, M, 2023. **Secondary School & School Management**: TEM journal.Volume-12. https://doi.org/10.18421/TEM123-70

[14] Priyamboo, p, & Hasanah, E,2019. **Strategic Planning in Increasing Quality of Education**, Nidhamul haq; Journal Manajemen pendidikan Islam, Indonesia. E- ISSN 2503–1481. https://doi.org/10.31538/ngh.v6il.1138

[15] Saglam, S, 2023. **Problems and Solution Methods of School Managers**: Education Science & Psychology, Turkey. ISSN: 1512-1801.

[16] Shahriyar, M, 2012. **Analysis study of Education Management Information System: history &findings……**https://org.doi.1013140/RG.2.2.11614.8369

[17] Silva and Amaradhasa, R, 2022. **Technology Mediated Education in Sri Lanka-Expectations, Challenges & Strategies**: Journal of Economics and Management Research, Sri Lanka. Volume-03 http://doi.org/10.47363/JESMR/2022

[18] Sunasig, K., et al, 2019. **Effective School management and principles leadership:** Mimbal sekolah dasar- e-journal, Indonesia.

[19] Sulthan.k., et al, 2021. **Effective School Management:** Journal of Advanced in Education & philosophy, Turkey.

[20] Supriyatha, Y, 2016. **Effective School Management**: Advanced in Economics, Business &management, Indonesia. Volume -15.

[21] Schildkamp,K, 2019. **Data based decision making of school improvement: Educational reseach,** Nederland, Volume -61, https://doi.org/10.1080

[22] Scanlon, E, 2021. **Educational Technology Research: Context, Complexity and Challenges,** Journal of Interactive Media of Education, England. http://dx.doi.org/doi.10.5334/jime.580




© 2025, IRJTSR 